**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 01/2023

பெயர் – பொன்ராஜ்(வா.சா.1)

நாள் – 03.09.2025

**<u>6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) வழக்கை என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அம்மா சொத்து எனக்கு வேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன். எனது அம்மாவிற்கு வழக்கு சொத்து யாரிடமிருந்து பாத்தியப்பட்டது என்றால் குருவம்மாளிடமிருந்து பாத்தியப்பட்டது. வழக்கு சொத்து தற்போது யார் அனுபவத்தில் உள்ளது என்றால் முருகன் அனுபவத்தில் உள்ளது. முருகனுக்கு வழக்கு சொத்தை யார் விற்றார் என்றால் மாரியம்மாள் விற்றார்.

2) 6–ம் பிரதிவாதி சார்பதிவாளர் பத்திர பதிவு சட்டத்தின் படி முறையான முத்திரை கட்டணம் பெற்று ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்து கிரையம் பெற்றது என்றால் சரியல்ல. 6 மற்றும் 7 பிரதிவாதிகள் இந்த வழக்கின் அவசியமற்ற கட்சிகாரர்கள் என்றால் சரியல்ல. எனவே 6 மற்றும் 7 பிரதிவாதிகள் பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.